1986 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

படுகிறது? வேறு செக்குகளுடன் அவை ஒப்பிட்டுப் பார்க்கப் பட்டனவா? அந்த வடிவமைப்பிலே கோளாறுகள் இருப்பதாகக் கூறுகிறார்களே, அதைத் திருத்தியமைக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, ஒரு மின்விசைச் செக்கில் ஆண்டு ஒன்றுக்கு எண்ணெயும் பிண்ணாக்கும் உற்பத்தி செய்ததில் 35 கோடி ரூபாய் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரங்களையெல்லாம் அவர்களுக்கு அனுப்பிவையுங்கள்.

4. அறிவிப்பு.

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்டமுன்வடிவு.

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.